C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 15 MAY '2023 ஆகாரம் : 05



"ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம்."

– 2 தெசலோனிக்கேயர்:3:8

*Neither did we eat anyone's bread without paying for it, but with toil and labor we worked night and day, that we might not be a burden to any of you.*

*- Thessalonians 3:8*

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| SAT<br>10.30 AM<br>1.00 PM | MONTHLY FASTING PRAYER<br>1 ST SATURDAY OF EVERY MONTH<br>CONTACT: THE PRESBYTER |
| SAT<br>6.30 PM<br>7.30 PM | CHILDREN'S BIBLE SCHOOL<br>ECC.CHURCH CENTER<br>MRS. AUGUSTA LAWRENCE @ 056 641 1676 |
| SAT<br>7.30 PM<br>9.00 PM | 1 ST WEEK - COMMUNION SERVICE<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>LAST WEEK - PRAISE & WORSHIP SERVICE |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 2 ND FRIDAY OF EVERY MONTH<br>MEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS. SHALY MELBIN @ 056 394 1817 |
| THU<br>7.30 PM<br>8.30 PM | 4TH THURSDAYOF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. SANTHOSH JOEL KUMAR @ 056 875 2723 |
| MAY 07 | BIBLE QUIZ<br>THE BOOK OF ROMANS |

# FROM THE PASTOR'S
# *Desk*

## உங்களிடம் இருந்து விடைபெறுகின்றோம்.....

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**" கர்த்தர் அரணான நகரத்தில் எனக்குத் தமது கிருபையை அதிசயமாய் விளங்கப்பண்ணினபடியால், அவருக்கு ஸ்தோத்திரம்"**

— சங்கீதம்:31:21

*"Blessed be the Lord, for he has wondrously shown his steadfast love to me when I was in a besieged city"*

- **Psalm:31:21**

## ஆண்டவர் இந்த தேசத்தில் எங்களுக்கு தந்த திருப்பணி வாழ்விற்காக நம்பிக்கையுடன் கூடிய நன்றிப்பாடல் – சங்கீதம்:31

- ஆண்டவர் எங்களுக்கு அடைக்கலமாயிருந்தார் —சங்கீதம்:31:1—4
- ஆண்டவர் மீது நம்பிக்கையுடன் இருந்தோம் —சங்கீதம்:31:5—6
- ஆண்டவர் தந்த வாழ்விற்காக, ஞானத்திற்காக, வழிநடத்துதலுக்காக அவரை போற்றுகிறோம் — சங்கீதம்:31:19—24

வரலாற்று சிறப்புமிக்க தென்னிந்திய திருச்சபையின் அங்கமாக இருக்கும் அல் அய்ன் சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை —யின் (CSI.TAMIL PARISH. AL AIN. UAE) குடும்பத்தில் கடந்த மூன்று ஆண்டுகள் உங்களோடு இணைந்து ஆண்டவரின் உன்னதமான திருப்பணியை செய்வதற்கு ஆண்டவர் தந்த பலத்திற்காக, ஞானத்திற்காக, சுகத்திற்காக ஆண்டவரை

உள்ளத்தின் ஆழத்திலிருந்து உங்களோடு இணைந்து துதிக்கின்றோம். இப்பொழுதுதான் அல் அய்ன் திருச்சபைக்கு வந்தது போல் இருக்கின்றது ஆனால் மூன்று ஆண்டுகள் வேகமாய் கடந்து விட்டது.

உங்களிடம் ஊழியத்திற்காய் கடந்து வந்த நாட்களை திரும்பிப் பார்க்கின்றோம் COVID–19 ஒரு வித்தியாசமான சூழ்நிலையில் கொரோனா தொற்று நோயின் காலகட்டத்தில் பல பாதிப்புகள் உள்ள சூழ்நிலையில் கட்டுப்பாடுகள் நிறைந்த காலகட்டத்தில் இந்த தேசத்திற்கு வரும்பொழுது ஒரு பயங்கரமான கேள்விக்குறியுடனும், பலர் எங்களைப் பார்த்து கேட்டது நீங்கள் இப்பொழுது போக வேண்டுமா? என்ற கேள்விகள் பல ஆனால் ஆண்டவரின் விருப்பத்திற்கு விட்டுக் கொடுத்து இந்த தேசத்தில் திருப்பணி செய்ய வந்தோம். ஆண்டவர் அற்புதமாய் எங்களை வழிநடத்தினார் கடந்த மூன்று ஆண்டுகள் எங்களால் முடிந்த அளவிற்கு ஆண்டவரின் விருப்பத்திற்கு ஏற்றார் போல் அவருடைய திருப்பணியை செய்து இப்பொழுது உங்களிடம் இருந்து கடந்து போகிறோம்.....

இந்த மூன்று ஆண்டுகள் எங்களுடன் மிகுந்த அன்பு கொண்டு எங்களை உற்சாகப்படுத்திய திருச்சபை குடும்பத்தினர் அனைவருக்கும் மற்றும் திருச்சபையை வழிநடத்திக் கொண்டிருக்கிற நிர்வாக குழுவிற்காக, நிர்வாக பொறுப்பாளர்களுக்காக, ஐக்கிய சங்கங்களுக்காக, பாடகர் குழுவிற்காக, CBS–ஊழியத்தின் பொறுப்பாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் எங்களை தனிப்பட்ட முறையில் நேசித்த திருச்சபையின் மூப்பர்கள், பெரியவர்கள் நாங்கள் சோர்ந்து போன நேரங்களில் எங்களை உற்சாகப்படுத்தியவர்கள், விசாரித்தவர்கள், உபசரித்தவர்கள், பல நிலைகளில் எங்களுக்கு உதவி செய்தவர்கள் அனைவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இன்றைக்கு இந்த திருச்சபை கடவுளின் கிருபையாலும், அநேகரின் ஜெபத்தினாலும் வளர்ந்து வருவதற்காக கடவுளுக்கு நன்றி செலுத்த அழைக்கப்படுகிறோம். நம்முடைய முன்னோர்கள் உழைத்து உழைப்பின் பலனை தரிசனங்களை ஆண்டவர் நிறைவேற்றிக் கொண்டிருப்பதற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்த அழைக்கப்படுகிறோம். அநேகப் புதிய குடும்ப நண்பர்களை ஆண்டவர் நமது திருச்சபை இணைத்து வருவதற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். அத்துடன் அமீரகத்தில் உள்ள அனைத்து தென்னிந்திய திருச்சபைகளுடன் ஒருங்கிணைந்து ஆண்டவரின் திருப்பணியை செய்யவும் அனைத்து திருச்சபைகளுடன் நல்ல உறவை வளர்த்துக் கொள்ளவும் ஆண்டவர் பாராட்டின கிருபைக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். அத்துடன் கடந்த மூன்று ஆண்டுகள் இந்த திருச்சபையின் வழியாக பல அனுபவங்களை நாங்கள் பெற்றுக் கொண்டோம், பல காரியங்களைக் கற்றுக் கொண்டோம். ஆண்டவர் நம் அனைவரையும் ஒன்றாக இணைத்து பயன்படுத்தினார் என்பதுதான் உண்மை.

தொடர்ந்து திருச்சபையின் வளர்ச்சிக்காகவும்! திருச்சபையின் குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கின்றோம். நீங்களும் எங்களுக்காக திருப்பணிகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்

நன்றி!

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.



அன்புடன்

*Kariss Angelo, Mrs.E.Nancy Baskar*

*&*

*Rev.S.P.Baskar*



# உழைப்பும் வாழ்வும்

## முன்னுரை:

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் காரணமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் பலரும் நாளொன்றுக்கு 12 முதல் 18 மணி நேரத்திற்கு கட்டாய வேலைச் செய்ய நிர்பந்திக்கப்பட்டனர். தொழிலாளர்களின் உழைப்பு அதிகமாகவே சுரண்டப்பட்டது. இதனால் அவர்கள் தங்களுடைய உரிமைகளை நிலை நாட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்படி தோன்றியது தான் தொழிலாளர் தினமாகும். இது உழைப்பதற்கு எதிரான தினமல்ல மாறாக, பிறர் உழைப்பை மூலதனமாக்கி வாழ்வதைத் தவிர்த்து, அவரவர் தங்கள் உழைப்பால் உயர வேண்டும் என்பதை வலியுறுத்தும் தினமாகும்.

*எந்த ஒரு பணியையும் மிகவும் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் செய்தால் வாழ்வில் உயர முடியும்*

*- DR. A.P.J.அப்துல்கலாம்*
*முன்னாள் குடியரசுத் தலைவர்.*

### › உழைப்பிற்கு முன்மாதிரி காட்டின கடவுள் (ஆதி:2:2)

*தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளை யெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். -ஆதி: 2:2*

கடவுள் ஆறு நாட்கள் வேலை செய்துவிட்டு ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார் என்று படிக்கின்றோம்.இங்குக் கடவுள் ஒரு கடினமான உழைப்பாளி என்பதை நாம் புரிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம். கடவுள் மனித சமூகத்திற்கு வகுத்தளித்த வாழ்வியல் முறைகளில் முதன்மையானது உழைத்து வாழ வேண்டும் என்பதாகும்.(ஆதி:2:15) இன்றைக்கு மனிதர்களிடம் இருக்கும் மிகவும் தவறான கருத்துக்களில் ஒன்று உடல் உழைப்பு என்பது மிகவும் இழிவானதுஎன்றும் உழைக்காமல் எல்லார் மீதும் ஆதிக்கம் செலுத்துவது தான் உயர்ந்தது

என்பதுமாகும். இத்தகைய எண்ணங்கள் நம்முடைய வாழ்விலிருந்து நாம் அகற்றவேண்டும். நேர்மையாக உழைப்பவரின் குடும்பம் ஆண்டவரிடம் ஆசிபெறுகின்றது. இதற்குச் சிறந்த உதாரணம் ரூத். அந்நிய நாட்டில் உழைத்து, தனது வாழ்வினைக் கட்ட முயன்ற போது, தக்க தருணத்தில் ஆண்டவர் உதவினார். ரூத்தின் கடினமான உழைப்பு, அன்பு, மன உறுதி அனைத்தும் அவருக்கு நன்மைகளைப் பெற்றுத் தந்தது.நாமும் கடவுளுக்கு பயந்து நேர்மையாகவும், அர்ப்பணிப்புடன் உழைத்தால் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.உழைப்பிற்கு மதிப்பு கொடுத்து அனைவரையும் மதிப்புடனும், மாண்புடனும் நடத்தி நிறைவான வாழ்வினை உழைப்பால் பெற்று மகிழ்வுடன் வாழ அழைக்கப்படுகிறோம்.

## › உழைப்பின் முயற்சியை அங்கீகரிக்கும் கிறிஸ்து. (யோவான்:5:1–10)

*அதற்கு வியாதிஸ்தன் ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றான்..*

*- யோவான்:5:7*



எருசலேம், பெதஸ்தா என்ற குளமருகில் முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல் நலமற்றிருந்த ஒரு மனிதரை இயேசு கண்டு நலம் பெற உதவுகின்றார். அந்த மனிதர் நலம் பெற்றதில் அவனுடைய பங்களிப்பு பெரிதாக இருந்தது. இயேசு அந்த மனிதரிடம் நலம்பெற விரும்புகிறீரா? என்று கேட்டபோது, அவர் தன்னுடைய இயலாமையை மட்டுமல்ல கூடவே தான் எடுக்கின்ற முயற்சியையும் வெளிப்படுத்துகிறார். "நான் போவதற்கு முன் வேறு ஒருவர் இறங்கி விடுகிறார்.. "நான் போவதற்கு முன் "என்ற வாக்கியம் அவர் எடுக்கும் முயற்சியை நமக்கு தெளிவுபடுத்துகின்றது. இயேசு கிறிஸ்து அம்மனிதரின் முயற்சியை அங்கீகரித்து அதற்கு மதிப்பளிக்கின்றார்.ஆகவே தான், அந்த மனிதரின் முயற்சியிலேயே அவர் சுகம் கிடைக்கும் படி செய்கின்றார். அம்மனிதரே படுக்கையை எடுத்துக் கொண்டு நடக்கும் படி செய்தார். (யோவான்:5:9) எப்போதும் முயற்சி செய்பவர்களை இயேசு கிறிஸ்து அங்கீகரித்து அவர்களுடன் இணைந்து செயல்படுகிறவறாகவே இருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம்.

## > உழைத்து உண்ண வலியுறுத்தும் அப்போஸ்தலர் பவுல். –(2தெச:3:6–15)

*மேலும், சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின் படி நடவாமல், ஒழுங்கற்ற நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலகவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்.*

*- 2 தெசலோனிக்கேயர்:3:6*

தூய பவுல் தெசலோனிக்கிய திருச்சபைக்கு சொல்லும்போது வாழ்வியல் முறைகளில் முதன்மையானது "உழைப்பதை, உழைத்து உண்பதை" குறிப்பிடுகின்றார். மேலும் அதை பின்பற்றாதவர்களை, விட்டு விலகி நில்லுங்கள் எனக்கூறுகிறார் (2தெச:3:6) நாம் வாழும் இன்றையச் சூழலிலும் சிலர் தங்கள் உழைப்பால் உணவைப் பெறுகின்றவர்களாகவே இருக்கிறோம். நம் வழிமரபினரையும் உழைக்காமல் பிறர் உழைப்பில் உண்ணவே பழக்கிக்கொண்டிருக்கிறோம். ஆகவே தூய பவுலின் வார்த்தை நம்மையும் எச்சரிப்பதாகவே அமைகின்றது . அப்போஸ்தலர்கள் மக்களிடையே நற்செய்தியைக் கொண்டு வந்தபோது யாருக்கும் சுமையாக இருக்கவில்லை. தங்களுடைய உழைப்பாலேயே தங்கள் தேவைகளைக் கவனித்துக் கொண்டார்கள். உழைத்து உண்ண வேண்டும் என்பதும் அவர்கள் நற்செய்தியில் உள்ளடங்கியதே. உழைத்து வாழாதவர் நற்செய்தியைப் பின்பற்றி வாழாதவரே ஆவர். உழைத்து உண்டு நாம் அனைவரும் நற்செய்திக்குச் சான்றுள்ளவர்களாய் வாழ தூய பவுல் வாயிலாக அழைக்கப்படுகிறோம்.

### நிறைவாக:

இன்றைக்கு நாமும் உழைத்து வாழ அழைக்கப்படுகிறோம்.உழைத்து வாழ்பவர்களை ஆண்டவரும் ஆசீர்வதிக்கிறார் . நாமும் உழைத்து ஆசிபெற்று நம் உழைப்பில் உண்டு நிறைவோடும், மகிழ்வுடன் வாழ நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக...

ஆண்டவரின் உன்னதப் பணியில் உங்கள் ஆயர்

*Rev.S.P.Baskar*



# பவுலின் காலத்தில் பெண்கள்

1கொரி:11:1-16, எபே:5:22-33

பவுலின் காலத்தில் யூதர்களுக்குள்ளும், யூதரல்லாத மக்களுக்குள்ளும் பெண்கள் மிகவும் தாழ்வாகக் கருதப்பட்டார்கள்.

ரோம மக்களிடையே பெண் குழந்தைகளுக்கு மதிப்புக் கிடையாது. ரோம போர்வீரன் ஒருவன் கர்ப்பிணியான தன் மனைவிக்கு எழுதிய கடிதத்தில் "ஆண்பிள்ளை பிறந்தால் வைத்துக் கொள் பெண் பிள்ளை பிறந்தால் கொன்றுவிடு" என்று எழுதியிருந்தார். யூத வரலாற்றில் பெண்கள் குறித்து காணும்போது கிரேக்கர், ரோமர் நிலையில் விட சற்று குறைவான நிலையில் பெண்களைக் காணலாம் எப்படியெனில்...

* **ஆளுமை தன்மையில்.**
* **நீதி சட்டத்தை வாசிப்பதில்.**
* **வழிபாட்டில் பங்கு பெறுவதில்.**

இவைகளில் பெண்களுக்குச் சமநிலை வழங்கப்படவில்லை

**ஒவ்வொரு யூத ஆண்மகனும் செய்யும் ஜெபம்.**



**"தோத்திரக்கப்பட்ட ஆண்டவரே என்னை நீர் ஒரு புற இனத்தானாகவோ, ஒரு அடிமையாகவே, ஒரு பெண்ணாகவோ படைக்காமல் ஓர் ஆணாகப் படைத்தற்காக உம்மைப் போற்றுகிறேன்."**

யூத ரபிமார் பாரம்பரியத்தில் பெண் பிள்ளைகளை விட ஆண்பிள்ளைகள் ஆசிர்வாதங்களாகக் கருதப்பட்டனர்..

### பெண்கள் சபையில் பேசக்கூடாது

இது பவுல் சொன்ன நோக்கம் வேறு இது பெண்கள் திருச்சபையில் அருளுரை ஆற்றுவதைக் குறிக்காது. அப்படி எடுத்துக் கொண்டால் தற்காலத்தில் பெண் அருளுரையாளர்கள் இருக்க முடியாது. பவுல் சொன்ன கருத்து என்னவென்றால் " திருச்சபையின் விதிமுறைகள், சிக்கல்கள் பற்றி பேச்சு வார்த்தைகளில் பெண்கள் பேசக்கூடாது என்றும் அப்படி பேசுவதற்கு பெண்கள் தவிர்க்க பட்டார்கள்.அவர்கள் பேசுவதின் மூலம் திருச்சபையில் அமைதி குறைந்து குழப்பங்கள் ஏற்படும் என்ற சிந்தனை யூத பாரம்பரியத்தில் அதிகமாக இருந்தது. எனவே தான் பவுல் பெண்கள் சபையில் பேசக்கூடாது என்று கூறினார். அதே நேரத்தில் பவுல் கிறிஸ்துவுக்குள் ஆண்களையும், பெண்களையும் சமமாக ஏற்றுக் கொண்டார். இதை நற்செய்தியாகவும் அறிவிக்கின்றார். "கிறிஸ்துவுகுள் ஆனென்றும் பெண்ணென்றும் பாகுபாடு இல்லை" என்ற நற்செய்தி எக்காலத்துக்கும் உரிய நற்செய்தி ஆகும்.

இப்படிப் பட்ட நிலையில் இருந்த காலத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது வாழ்விலும் பணியிலும் பெண்களுக்கு மிகுந்த சிறப்பினைக் கொடுத்தார். தன்னுடைய திருப்பணிகளில் பெண்களுக்கு அதிக பங்களிப்பு கொடுத்து முக்கியப் படுத்தினார், மிகவும் சிறப்பினைக் கொடுத்தார்.

**நிறைவாக**

இன்றைக்கும் பெண்கள் எல்ல நிலையிலும் ஆண்களுக்கு நிகராக வளர்ந்து இருப்பதற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்த அழைக்கப்படுகிறோம். திருச்சபையிலும், சமூகத்திலும் பெண்கள் மேன்மை பெறவும் பெண்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்து ஆண்டவரின் உன்னதப் பணியை செய்ய அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக

ஆண்டவரின் உன்னதப் பணியில் உங்கள் ஆயரம்மா

*Mrs . E . Nancy Baskar*



வேதநாயகம் சாஸ்திரியார் நெல்லையை சார்ந்தவர் என்றாலும், பொதுவாக மக்கள் சாஸ்திரியாரை,அவர் வளர்ந்ததும்,வாழ்ந்ததுமான தஞ்சாவூரையே அடையாளமாய் வைத்து இன்றும்




அவரை தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் என்றே அழைக்கின்றனர். வேதநாயகம் சாஸ்திரியார் மூலமாய் கிறிஸ்துவ சமுதாயம் பெற்ற பாடல்களை நாம் இன்றளவும் சபைகளில் பாடி வருகின்றோம். இவர் 1774 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ஆம் தேதி ஞானப்பூ அம்மையாருக்கும், கவிஞர் அருணாசலம் என்ற தேவசகாயம்பிள்ளைக்கும் மகனாக பிறந்தார். அருணாசலம் கிறிஸ்தவராகி தனது பெயரை தேவசகாயம் என்று மாற்றிகொண்டார். வேதநாயகத்திற்கு அவர்களுடைய பெற்றோர் வைத்த பெயர் "வேதபோதகம்" என்பதாகும்.ஆனால் அந்நாளில் அவருடைய சபையின் குருவுனுடைய பெயரும் "வேதபோதகம்" என்றிருந்ததால் குருவின் பெயரை உச்சரிக்க கூடாது என்று குரு பக்தியின் அடிபடையில் அவரை வேதபோதகம் என்று அழைக்காமல் "வேதநாயகம்" என்று அழைத்தனர்.

தனது மாணவனின் தந்தை அருணாசலம் கிறிஸ்தவராகி, தேவசகாயமானதால் கொண்ட வெறுப்பை, ஆசிரியர் வேலுப்பிள்ளை, மாணவன் வேதநாயகத்திடம் “எமனுக்குப் படிப்பு வந்தாலும் உனக்கு படிப்பு வராது!” என்று கடிந்து கொண்டார். அழுதவண்ணம் வேதநாயகம் தன் தந்தையிடம் சென்றார். அவரோ, மிஷனரிப் போதகர் சுவார்ட்ஸின் போதனையில், மெய் மறந்து உரையாடிக் கொண்டிருந்தார். ஊர்ப்பகையால், சிறுவனுக்கு இழைக்கப்பட்ட தீங்கைக் கண்ணுற்ற சுவார்ட்ஸ், “அழாதே ! பராபரன் உன்னை ஆசீர்வதித்து, மேன்மைப்படுத்துவார்” எனத் தேற்றினார்.

சுவார்ட்ஸ் ஐயரின் இந்த ஆறுதல் ஆசியை, சிறுவன் வேதநாயகம் தன் வாழ்நாள் முழுவதும் மறக்கவில்லை. தனது 12-வது வயதிலேயே கவிஞனானான். பத்தொன்பதாம் வயதில் தலைமை ஆசிரியரானான். பின்னர் தன் வாழ்நாளெல்லாம் இறைவனைப் புகழ்ந்து பாடி, “சுவிசேடக் கவிராயர்” என்ற சிறப்புப் பட்டமும் பெற்றான்!. பிற்காலத்தில் அவருடைய ஆசிரியர் சொன்ன வார்த்தை வேதநாயகனுடைய வாழ்கையில் பொய்யாகிவிட்டது. பழமொழிகள் அறிந்த பண்டிதனாகவும், சாஸ்திரங்கள் பல கற்ற சாஸ்திரியகவும் சர்வ வல்லமையுள்ள தேவன் வேதநாயகனை உருவாக்கினார்.தஞ்சையை அந்நாட்களில் ஆண்டுவந்த சரபோஜி மன்னன், சாஸ்திரியாரின் சிறுவயது நண்பரானார். அவர் சாஸ்திரியாரின் புலமையைப் பாராட்டித் தன் அரசவைக் கவிஞராக வைத்துக் கொண்டார். அவருக்கு மானியமும் வழங்கினார். “குற்றாலக் குறவஞ்சி” என்ற நாடகத்தின் அடிப்படையில் வேதநாயக சாஸ்திரியார், “பெத்லெகேம் குறவஞ்சி” என்ற பாடல் நூலைத் தனது 25-வது வயதிலேயே எழுதி, இயேசு தெய்வத்திற்குப் புகழ்மாலை சூட்டினார். இப்பாடல் நூலைத் தன் நண்பன் சரபோஜி மன்னனிடம் பாடிக் காட்டினார். மன்னனும் கேட்டு மகிழ்ந்தார்.

பின்னர் 1820-ம் ஆண்டு சரபோஜி, மன்னனாக முடிசூட்டப்பட்டபோது, சாஸ்திரியார் அவருக்கு வாழ்த்துப் பா ஒன்றைப் பாடினார். மகிழ்ந்த மன்னன் தான் வணங்கும் தஞ்சைப் பிரகதீஸ்வரர் மீது ஒரு குறவஞ்சி படைக்க, சாஸ்திரியாரை வேண்டினான். இதை எதிர்பாராத சாஸ்திரியார் திடுக்கிட்டார். ஏனெனில், அவர் இயேசு ஒருவரையன்றி, வேறொருவரையும் துதித்து ஆராதிப்பதில்லை. தன் பக்தி வைராக்கியத்தின்படி அரசரிடம் அமைதியாகத் தன் நிலையை எடுத்துக் கூறினார். ஆனால், சரபோஜியோ விடுவதாக இல்லை. பாடல்கள் நிறைந்த முழுநூலைப் பாடாவிட்டாலும், ஒரு பல்லவி போன்ற, காப்புச் செய்யுளையாவது, வினாயகர் மீது பாடிக்கொடுக்க வற்புறுத்தினான்.வேதநாயக சாஸ்திரியாருக்கு மிகவும் இக்கட்டான நிலை. தன்னை மிகவும் மதித்து, ஆதரவளித்துவரும் அரசனின் வேண்டுகோள் ஒருபுறம், ஆனால் மற்றொருபுறம், தன்னையே தியாகம் செய்து, அவரைப் பாவத்திலிருந்து மீட்டெடுத்த அன்பர் இயேசு ஒருவருக்கே செலுத்த வேண்டிய புகழ் ஆராதனை. மிகுந்த மனப் போராட்டத்துடன், சாஸ்திரியார் தன் வீடு திரும்பினார்.

வேதனையோடு தனது தர்ம சங்கடமான நிலையை மனைவியிடம் மெதுவாக எடுத்துச் சொன்னார். “ஆண்டவரைப் பாடும் வாயால், இப்படியும் ஒன்றைப் பாடப் போகிறீர்களா?” என்று கவலையுடன் அவர் மனைவி கேட்டார். ஆனால், சாஸ்திரியாரின் உள்ளமோ, ஒரே தெய்வமாகிய, நிகரற்ற இறைவன் இயேசுவின் மீதுள்ள பக்தி வைராக்கியத்தால் பொங்கிப் பாடலாக வழிந்தது. அப்பொழுது எழுதிய பாடலே “இயேசுவையே துதி செய் நீ மனமே இயேசுவையே துதி செய்” என்ற பாடலாகும். அடுத்த நாள் மன்னர் அவையில் மிகப்பெரிய கூட்டம் கூடியிருந்தது. சாஸ்திரியார் என்ன பாட்டுப்பாட போகிறார் என்று கேட்பதற்காக. எல்லாரும் சூழ நின்று பார்த்திருக்க, மன்னர் சரபோஜி அவரையே நோக்கி கொண்டிருந்தார். மன்னர் கேட்டுக்கொண்ட படியே அவர்கள் தெய்வத்தை பற்றி ஒரு பல்லவியையாவது சாஸ்திரியார் பாடுவார் என்று எதிர்பார்த்திருக்க முன்தினம் இரவில் கர்த்தர் கொடுத்த காலத்தால் அழியாத அந்த பாடலை தைரியமாய் தன்னுடைய கணீர் குரலால் கிறிஸ்துவை உயர்த்தி பாட ஆரம்பித்தார்

இயேசுவையே துதிசெய் – நீ மனமே
இயேசுவையே துதிசெய்
கிறிஸ்தேசுவையே துதிசெய்
நீ மனமே இயேசுவையே துதிசெய்

மாசணுகாத பராபர வஸ்து
நேசக்குமாரன் மெய்யான கிறிஸ்து
இயேசுவையே துதிசெய் நீ மனமே
இயேசுவையே துதி செய்

என்று தொடர்ந்து மூன்று அடிகளை மனமுருக பாடி முடித்தார். உன்னிப்பாக கேட்டுக் கொண்டிருந்த மன்னரிடமிருந்து கைத்தட்டல் ஆரம்பித்தது. இறைவன் இயேசுவின் மீது சாஸ்திரியார் கொண்டிருந்த ஆழ்ந்த விசுவாசப் பற்றைப் பெரிதும் பாராட்டினான் மன்னர் சரபோஜி. “உம் தெய்வத்தைப் பற்றி நீர் எங்கும் தடையின்றி எடுத்துக் கூற, என் அனுமதி உமக்குண்டு”. என்று கூறினான். இன்றளவும் சபைகளில் இந்த பாடல் பாடப்பட்டு, தேவனுடைய நாமம் மகிமைப்பட்டு வருகிறது.

ARTICLE BY

MEN’S FLLOWSHIP



# சீரோபேனிக்கேயா

Article by
SIS. RADHIKA SELVAKUMAR

**"அதற்கு அவள்: மெய்தான், ஆண்டவரே, ஆகிலும் மேஜையின் கீழ் இருக்கும் நாய்க்குட்டிகள் பிள்ளைகள் சிந்துகிற துணிக்கைகளை தின்னுமே என்றாள்." –மாற்கு 7:28**

## முன்னுரை:

சீரோபேனிக்கேயா நாடு என்பது கலிலேயாவுக்கு அடுத்த பிரதேசம். இயேசு தமது ஊழிய நாட்களில் கலிலேயா பகுதியில் அதிக நேரம் செலவிட்டார். அவர் அங்கு அநேக அற்புதங்களையும் செய்தார். அதனால் அதற்கு அருகாமையில் உள்ளதீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளில் கூட அவர் செயல் பிரஸ்தாபமாய் இருந்தது. அப்படியே அவர் தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளில் ஒரு வீட்டுக்குள் இருக்கும்போது சீரோபேனிக்கேயா தேசத்தாளாகிய ஒரு கிரேக்க ஸ்திரீ இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டு அவர் பாதத்தில் விழுந்தாள். அவள் இயேசுவின் மேல் அதிக நம்பிக்கை கொண்டிருந்தாள். தன் மகளை பிடித்திருந்த பிசாசிடமிருந்து அவளை விடுதலையாக்க அவரால் முடியும் என்று நம்பினாள். அந்த ஸ்திரீயை குறித்து பார்ப்போம்.

### › கிறிஸ்துவில் அதிக விசுவாசம் கொண்டாள்

இவள் இயேசுவை ஆண்டவர் என்றும், தாவீதின் குமாரன் என்றும் அறிந்திருந்தாள். அதை அறிக்கையிட்டு, பிசாசினால் அவதிப்படும் தன் மகளைப் பற்றிக் கூறி, அவர் தனக்கு இரங்கும் படி வேண்டினாள். ஆனால் இயேசுவோ ஒரு வார்த்தையும் பேசவில்லை. அவள் தொடர்ந்து வேண்டிக் கொண்டபடியால் அவருடைய சீஷர்கள் வந்து அவளை அனுப்பி விடும்படி வேண்டினர். இயேசு, அவள் தனது பிள்ளையின் மேல் வைத்திருந்த பாசத்தை கண்டார். அந்தப் பிள்ளையின் சுகத்திற்காக தன்னை தாழ்த்தவும், அவர் பாதம் அர்ப்பணிக்கவும் தயாராக இருப்பதைக் கண்டார். பொன்னை பார்க்கிலும் விலையேறப்பெற்ற அவளது விசுவாசத்தை சோதித்து அதைப் புகழ்ச்சியும், கனமும், மகிமையுமுண்டாக (I பேதுரு 1:7) விளங்கப் பண்ணுவது அவரது சித்தமாக இருந்தது. இயேசுவின் பாதத்தில் விழுந்து தன் மகளைப் பிடித்திருந்த பிசாசை துரத்தி விட வேண்டும் என்று விண்ணப்பித்தாள் அந்த தாய். இயேசு அவளிடம் "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல"

என்று கூறி அவள் விசுவாசத்தை சோதித்தார். இந்த வார்த்தைகள் அவளை எவ்வளவும் பாதிக்கவில்லை. மாறாக அவள் தன்னை அந்த நாய்க்குட்டியின் நிலைமைக்கு தாழ்த்துகிறாள். சாப்பிடும் போது பிள்ளைகள் சிந்துகிற துணிக்கைகளை மேஜையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் தின்னுமே. அதாவது அந்த துணிக்கைகள் தனக்கும் தன் மகளுக்கும் போதுமானது என்று விசுவாச அறிக்கையிட்டாள். இயேசு அவளது விசுவாசத்தை "ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது" என்று மெச்சினார். பிசாசு உன் மகளை விட்டு நீங்கிப் போயிற்று என்றார். அந்நேரமே அந்த மகள் சொஸ்தமானாள்.

### › விசுவாசத்தினால் வெற்றிக் காண்டாள்

அவள் தன் வீட்டிற்கு வந்தபோது பிசாசு போய்விட்டதையும், தன் மகள் கட்டிலில் படுத்திருக்கிறதையும் கண்டாள். அவள் பல மையில் தூரம் நடந்து சென்று இயேசுவை சந்தித்தது வீணாகவில்லை. இயேசுவின் பாதம் விழுந்து உதவி கேட்டது நன்மையாக முடிந்தது. சமுதாய கட்டுப்பாடுகளை கடந்து ஒரு யூதக் குருவைச் சந்திக்க தீர்மானித்தது அவள் மகளின் கட்டுகள் அவிழ ஏதுவானது. அவள் கேட்ட ஆசீர்வாதம் எல்லாம் கிடைத்தது.




வேதத்தில் இரண்டு பேர் தங்களது விசுவாசத்திற்காக இயேசுவின் பாராட்டுதலை பெற்றனர். கடவுள் இஸ்ரவேலருக்கு மட்டுமல்ல, அவரது பிள்ளைகள் யாவருக்கும் சுகம், இரட்சிப்பு, சமாதானம் அளிக்கச் சித்தமுள்ளவர். "அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் அவருடைய பிள்ளைகள் ஆகும் அதிகாரத்தை அவர் கொடுத்திருக்கிறார்" – யோவான்:1:12. அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. இயேசு யூதருக்கு மட்டுமல்ல, அவர் உலக இரட்சகர் (யோவான் 4:42). அவரை நாம் ஏற்றுக்கொள்ளும்போது பிள்ளைகளின் சுதந்திரம் நமக்கு கிடைக்கும். புறஜாதியான யூதர்கள் நாய்கள் என இயேசு குறிப்பிட்டார். அது இகழ்ச்சி சொல்லல. ஜீவ அப்பமாகிய இயேசு கிறிஸ்து நமக்காக சிலுவையில் நொறுக்கப்பட்டார். அந்த அப்பத்தில் பங்கு கொள்ளும் நாம் அனைவரும் அவர் பிள்ளைகள். அவரே நமது தேவைகள் அனைத்தையும் சந்திக்க போதுமானவர்.

## முடிவுரை:


சீரோபேனிக்கேயா ஸ்திரீயின் ஜெபமானது குறுகினதாயிருந்தாலும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வந்தது. அந்த ஜெபம் தாழ்மையுடனும், காரணத்துடனும் கருத்தோடு இயேசுவின் மேல் முழு விசுவாசத்தோடு ஏறெடுக்கப்பட்ட ஜெபமாயிருந்தது. இப்படிப்பட்ட ஜெபங்கள் பதில் பெறாமல் திரும்பாது. நாம் எந்த சமுதாய பின்னணியில் இருந்தாலும் நேசரின் பாதத்தில் விழுந்து விசுவாசத்தோடு ஜெபிக்கும் போது அவரின் ஆசிர்வாதம் நம்மைத் தேடி வரும். நம்முடைய வாழ்வை பெலவீனமாக்கும் எப்படிப்பட்ட பிசாசின் கட்டாயினும், இயேசு அவற்றிலிருந்து நம்மை விடுவிக்க போதுமானவர். “மெய்யாகவே குமாரன் உங்களை விடுதலையாக்கினால் நீங்கள் விடுதலையாவீர்கள்” – யோவான் 8:36. பிள்ளைகளுக்காக நாம் நம்மை தாழ்த்தி விசுவாசத்தோடு ஜெபிப்போம். தேவன் பெரிய காரியங்களைச் செய்வார்.

WOMEN'S Fellowship



# "IAM" STATEMENTS OF JESUS


## *I am the Light of the world*





## *I am the Good Shepherd*





## *Iam the Bread of Life*





## *I am the Vine, You are the Branches*



## *I am the Gate*




## *I am the Resurrection & the Life*




## *I am the Way, the Truth & the Life*




# *JUNIOR A*

Teacher: Mrs. Jeyantha John

# APRIL WINNERS

## Find the way

- Liana
- Regan Shan
- Jania Preni
- Johan Sanjo
- Kariss Angelo
- Chris Gabriel
- Jessica
- Bernicia
- Patricia
- J.Joshua

## Kids Colouring

- Bernicia
- Jania Preni
- J.Johana
- Jessica
- Kariss Angelo
- Chris Gabriel
- Patricia
- Liana
- Regan Shan

WELL DONE!

## Word Search

- Johan Sanjo
- Jaaon Eric
- Kariss Angelo
- Jessica
- Sherin Shah
- Patricia
- J.Joshua

## Cross Word

- Jason Eric
- Sherin Shah
- Johan Sanjo

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject: Your name / Quiz, type / Month - Year**

**To Church Email: csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# EXODUS: 31-40

# யாத்திராகமம்: 31-40

MAY '23 - QUESTIONS

*1. ஓய்வு நாளில் வேலைசெய்கிறவன் என்ன செய்யப்படுவான்?*

*2. ஆரோன் எதைக்கொண்டு என்னிடத்தில் வாருங்கள் என்றார்?*

*3.இஸ்ரயேல் புத்திரர் எங்கே தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப் போட்டார்கள்?*



*4.மோசே தன் முகத்தின் மேல் ------------ போட்டிருந்தான்?*

*5.யார் வெள்ளாட்டு மயிரைத்திரித்தார்கள்?*

*6. வாசஸ்தலத்திற்கு எந்த மரத்தால் பலகைகள் செய்யப்பட்டது?*

*7. சீத்திம் மரத்தில் செய்யப்பட்ட தண்டுகள் எதனால் மூடப்பட்டது?*

*8. ஊரியின் குமாரன் பெயர் என்ன?*

*9. ஏபோத் எதனால் செய்யப்பட்டது?*




*10. மோசே, ஆசாரிப்பு கூடாரத்தில் திரைக்கு முன் எதைவைத்தார்?*

## ஏப்ரல் - 2023-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. யாத்: 21:21 | 2. யாத்: 22:18 | 3. யாத்: 23:10 | 4. யாத்: 24:18 | 5. யாத்: 25:18

6. யாத்: 26: 22 | 7. யாத்: 27:6 | 8. யாத்: 28:40 | 9. யாத்: 29:37 | 10. யாத்: 30:37

**திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன், திருமதி.ஜெயின் ராஜவேல், செல்வி.அஜின்ஷா, செல்வி.ஷைரின்ஷா, திருமதி.ரேனா ஜோஸ் செல்வகுமார், திருமதி.பமிலா ரேச்சல் டேனியல், திருமதி. ஜெயந்த ஜான்**

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.
மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Your Name / Bible Quiz / MAY'23 / Send to: csitcalain@gmail.com

056 766 8348


Name: ______________________ Date: ____________

# Kids Coloring




# Find the Way

Name : ........................................................................




HELP THE ANIMALS GET TO NOAH.



# WORD SEARCH

Find the words listed below

## Mothers of the Bible


| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Z | J | Y | D | J | X | Q | M | G | G | B | C | B | Q | G | E | R | V | T | U | S | E | Y | T |
| I | L | P | K | F | I | B | C | G | Y | I | S | Z | B | Z | V | A | S | Q | Y | M | A | R | Y |
| B | E | S | T | H | E | R | L | Z | H | A | G | A | R | O | X | C | V | V | R | H | U | W | R |
| I | E | C | M | T | T | X | A | G | F | E | J | S | P | Y | X | H | Y | R | B | U | U | M | D |
| A | A | E | E | J | F | L | U | X | L | L | W | K | L | T | H | E | T | H | T | M | D | C | D |
| H | E | N | Y | U | U | S | D | R | T | Y | L | S | H | J | A | L | J | W | F | J | R | N | D |
| D | A | F | M | T | W | W | I | X | V | S | E | T | C | F | N | L | I | L | X | F | F | R | G |
| E | D | Z | R | N | G | D | A | D | C | W | L | I | S | R | N | O | R | K | E | C | N | R | L |
| F | F | X | B | B | E | R | N | I | C | E | M | Y | V | G | A | D | U | F | W | W | Y | T | N |
| U | U | P | A | F | C | G | J | A | Y | S | W | R | E | T | H | K | E | K | L | O | C | O | V |
| Y | A | N | T | A | N | E | M | T | O | E | C | T | P | I | F | F | N | N | F | A | P | G | U |
| E | B | N | H | R | Y | X | M | I | R | A | B | I | G | A | I | L | H | X | Q | C | S | P | R |
| U | Y | A | S | C | K | V | N | K | O | S | L | J | H | Z | M | Y | H | B | N | F | L | V | R |
| N | D | O | H | X | D | F | B | Y | D | S | A | N | T | U | Z | Y | A | M | R | B | A | Q | U |
| I | M | M | E | D | Y | A | Z | E | R | U | I | A | H | K | T | L | F | T | E | Y | V | P | T |
| C | V | I | B | I | X | O | S | C | H | V | D | O | X | L | C | W | Z | A | B | F | Q | W | H |
| E | D | Y | A | N | U | S | R | G | F | W | J | C | L | L | I | J | P | M | E | W | E | Q | J |
| Z | J | Q | A | A | J | M | Z | F | B | I | X | M | H | E | S | O | U | A | K | I | K | Z | V |
| V | D | L | Z | H | X | N | I | E | I | U | M | K | W | E | E | X | K | R | A | M | A | G | E |
| E | L | I | S | A | B | E | T | H | J | W | M | Y | Y | I | Q | O | C | A | H | B | P | P | O |
| Q | Z | U | Q | M | Z | D | N | D | D | G | O | M | E | R | B | O | F | I | A | A | B | A | T |
| J | D | O | R | C | A | S | M | A | R | T | H | A | N | W | L | B | K | U | A | M | M | V | S |
| L | O | I | S | E | I | D | L | E | A | H | I | A | N | N | A | Y | K | J | D | T | Z | W | F |
| Y | W | J | O | E | M | S | S | A | R | A | H | Z | E | A | K | P | B | F | S | D | S | R | G |

| | | | | |
|---|---|---|---|---|
| ABIGAIL | ANNA | BATHSHEBA | BERNICE | CLAUDIA |
| DINAH | DORCAS | ESTHER | ELISABETH | EUNICE |
| GOMER | HAGAR | HANNAH | LEAH | LOIS |
| MARTHA | MARY | NAOMI | RACHEL | REBEKAH |
| RUTH | SARAH | TAMAR | ZERUIAH | ZIBIAH |

**CROSS WORDS**

Name : ..............................................................................

# Mothers of the Bible



**Across**

**3.** Naomi and Ruth were also?

**8.** What was Lois?

**11.** Ruth was great grandmother to who?

**13.** Who is the mother of all living?

**14.** God hears our ? as well as our words

**16.** Where was Mary from?

**Down**

**1.** Timothy's father was a ?

**2.** Naomi was ? to Ruth

**4.** Timothy's mother's name was?

**5.** Who did Hannah leave with the priest Eli?

**6.** Mary was a tender ?

**7.** Hannah's name means what?

**9.** Elkanah's second wife

**10.** Who did Mary visit after she found out her pregnancy?

**12.** Who tempted Eve in the garden?

**15.** Oldest son of Adam and Eve

# MAY - 2023

| | |
|---|---|
| 01-MAY | Baby. Alen Maisie D/o Mr. Alvin Kumar Asirmanns |
| 01-MAY | Mastr. Joyson Stubert S/o Mr. Kingsly Stubert |
| 02-MAY | Mastr. Gain S/o Mr. George Rose |
| 03-MAY | Mr. Ashok Kumar S |
| 04-MAY | Mrs. Jean Christy Emmanuel |
| 05-MAY | Mrs. Lavanya Kannan |
| 05-MAY | Mr. Appavoo Nicson Kennedy |
| 05-MAY | Mr. Stephen Pradeepkumar |
| 06-MAY | Baby. Shaana Liliya D/o Mr. S.Simeyon |
| 07-MAY | Rev. S. Paranjothi Baskar |
| 08-MAY | Mr. Arunkumar.K |
| 08-MAY | Baby. Jesil Bernice D/o Mr. Herchil Harish |
| 10-MAY | Mrs. Beula Rani Livingston |
| 11-MAY | Mr. Rajesh ChellaDurai |
| 11-MAY | Mr. M.Jose Selvakumar |
| 12-MAY | Mr. Suresh Babu |

*Wish you many more happy returns of the day God bless you all*

# MAY - 2023

| | |
|---|---|
| 13-MAY | Mr. Selvistor Solomon |
| 15-MAY | Mr. George Rose |
| 16-MAY | Mr. Selva Kumar |
| 16-MAY | Mr. Lenin |
| 16-MAY | Mrs. Nirmala Jenifer Paul |
| 17-MAY | Mrs. ArputhaMary Sandanam |
| 17-MAY | Mastr. B.Briston Isac S/o Mr. Berlin Jose.I |
| 18-MAY | Mr. R Aruldhas |
| 19-MAY | Mrs. Salini Vimala Kingsly |
| 19-MAY | Mr. Robert Wilson.T |
| 19-MAY | Mr. Vijinraj.P |
| 20-MAY | Mr. Pushparaj.B |
| 20-MAY | Baby. Felicia Leenus Obed D/o Leenus Patrick Obed |
| 22-MAY | Mrs. Iswarya Obed |
| 23-MAY | Mr. C.Havin Heba |
| 25-MAY | Mr. Shino P Mathew |

*Wish you many more happy returns of the day God bless you all*

# MAY - 2023

| | |
|---|---|
| 26-MAY | Baby. J.H.Juana D/o Mr. Jayan Dharmaraj |
| 28-MAY | Mr. Suresh Rajan |
| 29-MAY | Ms. Rishita kannan D/o Mr. A.S.Kannan |
| 29-MAY | Baby. J.V.Kerenhappuch Abiah D/o Mr. D.Jeyakumar |
| 30-MAY | Baby. Aashika Arun Kumar D/o Mr. Arun Kumar.V |

## MAY *Wedding* ANNIVERSARY

| | |
|---|---|
| 04-MAY | Mr. Lawrence Gambeeram & Mrs. Augusta Lawrence |
| 06-MAY | Mr. R Aruldhas & Mrs. Prasana |
| 07-MAY | Mr. Shino P Mathew & Mrs. Shelly Kurian |
| 08-MAY | Mr. Thanu Lingam & Mrs. Preeda Nancy.R |
| 12-MAY | Mr. Selva Kumar & Mrs. Radhika Grace Selva Kumar |
| 13-MAY | Mr. John Joseph & Mrs. Jessy Beula John Joseph |
| 16-MAY | Mr. S.Simeyon & Mrs. J.N.Basil Shallu |
| 19-MAY | Mr. M.Jose Selvakumar & Mrs. Rena Ivolet Jasmine |
| 25-MAY | Mr. David Sornabalan & Mrs. Yesubai |
| 25-MAY | Mr. Antony Jesu Rajan & Mrs. Jamuna Rani |
| 25-MAY | Mr. Vijinraj.P & Mrs. Pamela Jennifer.J.P |
| 26-MAY | Mr. Y.Mesiah Das & Mrs. Suja Jasmine Mesiah Das |
| 26-MAY | Mr. Rajesh ChellaDurai & Mrs. Shalini |
| 31-MAY | Mr. Livingston Samuel & Mrs. Segena Livingston |
| 31-MAY | Mr. Lenin & Mrs. Kitty Christina |











# 15th Church Anniversary














# Confirmation & Baptism - 2023



# Farewell to our Pastor & Family






EDITOR

THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com Web: csitamilparishalain.org


STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY